# அமாவாசை – செப்டம்பர் 2017 சாட்சியங்கள்



**1. கருங்குடி - C. அருள்தாஸ்**

எனக்கு மூன்று ஏக்கர் பயிர் நிலம் இருந்தது. நிலத்தில் போதுமான தண்ணீர் இல்லாததால் எதையும் பயிர் செய்ய முடியாமல் இருந்தது. நான் அமாவாசை ஜெபக்கூட்டத்தில் கலந்துக் கொண்டு நல்ல மழைவேண்டி ஜெபித்தேன் இறைவன் மழையினை கொடுத்து நிலத்தில் நல்ல மகசூல் கிடைக்கும்படி ஆசீர்வதித்தார். எம்மாவுஸ் ஆண்டவருக்கு நன்றி!

**2. மேல்வழி - பவுலினாமரி**



என் உறவுகார பெண் இரண்டு வருடமாக கை, கால்கள் செயலிழந்துவிட்டது. நான் ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து அமாவாசை ஜெபக்கூட்டத்தில் கலந்துக்கொண்டு அப்பெண் நலமடைய வேண்டி ஜெபித்தேன். எம்மாவுஸ் எண்ணெய்யை கை, கால்களில் தடவும்படி கொடுத்தேன். இப்போது அவர்கள் குணமாகிவிட்டார்கள். எம்மாவுஸ் ஆண்டவருக்கு நன்றி!

**3. மேலகொளக்குடி - பெரியநாயகி**



என் நிலத்தை அடுத்த ஊர்காரர் அவருடைய நிலம் என்றுச் சொல்லி எம் மீது வழக்கு தொடர்ந்தார் 5 வருடமாக இந்த வழக்கு பிரச்சனை இருந்தது. நான் எம்மாவுஸ் அமாவாசை ஜெபத்தில் கலந்துக்கொண்டு இறைவனிடம் சாட்சி சொல்வதாக வேண்டிக்கொண்டேன். வழக்கில் எனக்கு சாதகமான தீர்ப்பு வழங்கப்பட்டு என் நிலம் எனக்கு சொந்தமானது. நிலத்தில் எம்மாவுஸ் உப்பு போட்டு பிறகு பயிர் செய்தேன் நல்ல விளைச்சலை ஆண்டவர் கொடுத்தார். எம்மாவுஸ் ஆண்டவருக்கு நன்றி!



**4. கோ.பவளக்குடி - களியம்மாள்**

என் மகனுக்கு திருமணம் நடந்த பிறகு 3 வருடமாக, கருத்து வேறுபாடு காரணமாக கணவன் மனைவி இருவரும் பிரிந்திருந்தார்கள். நானும் மூன்று வருடமாக எம்மாவுஸ் அமாவாசை ஜெபத்தில் கலந்துக் கொண்டு அவர்கள் ஒன்று சேர்ந்தால் சாட்சி சொல்வதாக வேண்டிக் கொண்டேன். இப்போது இருவரும் ஒன்று சேர்ந்துவிட்டார்கள். இறைவன் அவர்களுக்கு ஒரு ஆண் குழந்தையும் கொடுத்து ஆசீர்வதித்துள்ளார். எம்மாவுஸ் ஆண்டவருக்கு நன்றி!

**5. இளவரசன்கோட்டை - சகாயம்**



ஒரு வருடமாக வயிற்றுவலி இருந்தது. கிட்னியில் கல் இருப்பதாக தெரிந்து மருந்து மாத்திரை சாப்பிட்டும் குணமாகவில்லை. கிட்னியில் கல் பெரிதாக உள்ளது எனவே ஆப்ரேஷன் செய்ய வேண்டும் என்று கூறிவிட்டார்கள். நான் எம்மாவுஸ்க்கு வந்து ஜெபத்தில் கலந்துக் கொண்டேன். ஆப்ரேஷன் ஆகாமல் குணமாக வேண்டும் என்று வேண்டிக்கொண்டேன் ஒரு நாள் இரவு வயிற்றில் மிகவும் அதிக வலி ஏற்ப்பட்டது. எம்மாவுஸ் எண்ணெய்யை குடித்தேன், வயிற்றில் தடவினேன் சிறிது நேரத்திற்கு பிறகு கல் வெளியேறியது. என்னை குணமாக்கிய எம்மாவுஸ் ஆண்டவருக்கு நன்றி!

**6. வீராரெட்டிக்கும் - லூர்துமேரி**



என் பேரபிள்ளைக்கு காய்ச்சல் வந்து மிகவும் மோசமான நிலையில் இருந்தார். வெள்ளை அணுக்கள் அதிகமாக இருப்பதால் இரத்த சோகை உள்ளது என்று கூறினார்கள். தொடர்ந்து ஆறு வருடத்திற்கு மாத்திரை சாப்பிடவேண்டும் என்றும் கூறினார்கள். சென்ற மாதம் அமாவாசை ஜெபத்தில் கலந்துக் கொண்டு குணமானால் சாட்சி சொல்வதாக வேண்டிக்கொண்டேன். இப்போது என் பேரபிள்ளை குணமடைந்துவிட்டாள். குணமாக்கிய ஆண்டவருக்கு நன்றி!

**7. A. குமாரமங்களம் - கீதா**



என் சின்ன மகன் கிருஷ்ணகுமாருக்கு 2 வருடமாக மூலம் பாதிப்பு இருந்தது. மருந்து சாப்பிட்டாலும் அப்போது மட்டும் குணமாகவும் மீண்டும் கட்டி வந்துவிடும். மிகவும் வேதனைப்பட்டான். கடந்த மாதம் அமாவாசைக்கு அவனை அழைத்து வந்து ஜெபத்தில் கலந்துக் கொண்டேன். ஆண்டவரே நான் இங்கிருந்து வீடு செல்வதற்குள் என் மகனின் மூலம் கட்டியினை காணாமல் போக செய்ய வேண்டும் என்று உறுதியான நம்பிக்கையுடன் வேண்டிக் கொண்டேன். பிறகு வீட்டிற்க்கு சென்றதும் என் மகன் கட்டி மறைந்து விட்டதாக கூறினான். என் வேண்டுதலை கேட்டு என் மகனை குணமாக்கிய எம்மாவுஸ் ஆண்டவருக்கு நன்றி!



**8. T. அத்திபாக்கம் - அந்தோணி குரூஸ்**

2014-ம் ஆண்டிலிருந்து என் குடும்பம் கஸ்டமான சூழ்நிலையில் இருந்தது. எனக்கு நிரந்தர வேலை இல்லை. நானும் என் மனைவியும் அமாவாசை ஜெபத்தில் கலந்துக் கொண்டு உருக்கமாக வேண்டிக் கொண்டேன். பிறகு என் நண்பரின் மூலம் ஜப்பானில் வேலைவாய்ப்பு கிடைத்தது. யாருக்கும் பணம் கொடுக்கமால் நான் வெளிநாடு செல்வதற்க்கும், அங்கு (லைசன்ஸ்) எடுப்பதற்க்கும் இறைவன் எனக்கு அருள்புரிந்தார். என் குடும்பத்தை வளமாக்கிய ஆண்டவருக்கு நன்றி!

**9. விருத்தாசலம் - பெரியநாயகி**



என் மகனும், பேரப்பிள்ளையும் டெங்கு காய்ச்சலினால் அவதிப்பட்டார்கள். நான் எம்மாவுஸ் ஆண்டவரிடம் வேண்டிக் கொண்டேன். தினமும் ஜெபமாலையும், ஆயிரம் ஸ்தோஸ்திரபலியும் சொல்லி வேண்டிக் கொண்டேன். இறைவன் 20 நாளிலில் இருவருக்கும் குணம் கொடுத்து ஆசீர்வதித்தார். எம்மாவுஸ் ஆண்டவருக்கு நன்றி!



**10.குள்ளம்சாவடி - கலா**

நான் மூன்று வருடமாக எம்மாவுஸ் அமாவாசை ஜெபக்கூட்டத்திற்கு வந்துக் கொண்டிருக்கிறேன். எனக்கு ஒரே ஒரு மகன்தான் என் கணவர் இல்லை. என் மகனுக்கு வேலை கிடைத்து கோவாவிற்கு சென்றுவிட்டான். நான் தனிமையில் இருப்பது மிகவும் வேதனையாக இருந்தது. என் மகனுக்கு பணி இடமாற்றம் கிடைக்க வேண்டும் என்று எம்மாவுஸ் ஆண்டவரிடம் வேண்டிக்கொண்டேன். பணி இடமாற்றம் கிடைத்தது. எம்மாவுஸ் ஆண்டவருக்கு நன்றி!

## சிறப்பு சாட்சி – God is Great

**சவேரியார்புரம் - சாந்தன்**



ஒரு வருடத்திற்கு முன்பு விபத்து ஏற்பட்டு என் தோள்பட்டை எலும்பு முறிந்து விட்டது. அதை குணமாக்க 1 இலட்சம் செலவு ஆகும் என்று மருத்துவர்கள் கூறினார்கள். என் தாய் என்னை எம்மாவுஸ் ஜெபக்கூட்டத்திற்கு சென்று, மந்திரித்த எண்ணெய்யை வாங்கி, தடவும்படி கூறினார்கள் நானும் என் தாயின் கட்டாயத்திற்கு சென்று எண்ணெய் வாங்கி வந்து நம்பிக்கை இல்லாமல் தான் 10 நாட்கள் தடவினேன். பிறகு ஸ்கேன் செய்து பார்த்ததில் எலும்பில் இருந்த பாதிப்பு முற்றிலும் குணமாகிருந்தது. மருந்துவர் வேறு எங்காவது சென்று வைத்தியம் செய்தீர்களா? என்று கேட்டார். நான் நடந்ததை கூறினேன் உடனே அவர் God is Great என்று சொன்னார். என்னை குணமாக்கி எனக்கு இறை நம்பிக்கையை கொடுத்த எம்மாவுஸ் ஆண்டவருக்கு நன்றி!

"விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது எனப் பறைச்சாற்றுங்கள்" (மத்.10:7)

# ஊழியர்களுக்கான மூன்று நாள் சிறப்பு பயிற்சி முகாம்

**நாள் : 2017-டிசம்பர் 1,2,3 (வெள்ளி, சனி, ஞாயிறு)**

**நேரம் : 1-ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி முதல் ஞாயிறு மதிய உணவோடு முடிவடையும்**

**சிறப்புச் செய்தியாளர்கள் : சகோ. ராஜேந்திரன் -** டிவைன், சாலக்குடி

**சகோ. சந்தோஷ் -** கேரளா

விருப்பமுள்ள அனைத்து சகோதர, சகோதரிகளும் இதில் கலந்துக் கொள்ளலாம். இறைவனின் பிரிரியமுள்ள மக்களாக, அவர் பணி செய்து வாழ்ந்திட, இந்த பயிற்சியில் பங்குபெற அன்புடன் அழைக்கிறோம். தங்கள் வருகையை எங்களுக்கு தெரியப்படுத்த வேண்டிய

## தொலைபேசி எண்கள்

## 865290550, 8012779690

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

### *சிறப்பு சாட்சி – சொத்து கிடைத்தது*

**புள்ளம்பாடி - குழந்தைதிரேஸ்**



என் குடும்பத்தில் 5 வருடமாக சொத்து தகராறு இருந்தது. என் கணவரும் இறந்துவிட்ட நிலையில், என் கணவரின் தம்பி சொத்து எழுதிதர மறுத்துவிட்டார். அநேக பேச்சுவார்த்தைக்கு பின் எழுதி தருகிறேன் என்று சொன்னவர், அந்த குறிப்பிட்ட நாளில் வரவில்லை. ஊரைவிட்டு போய்விட்டார். நான் கடந்த மாதம் அமாவாசை ஜெபத்தில் கலந்துக் கொண்டு, எங்களின் சொத்து கிடைத்து விட்டால் சாட்சி சொல்வதாக வேண்டிக் கொண்டேன். என் கணவரின் தம்பி மனம்மாறி சொத்துக்களை எழுதி தந்துவிட்டார். என் வேண்டுதலை நிறைவேற்றிய எம்மாவுஸ் ஆண்டவருக்கு நன்றி!